பிரசார்பாரதி

**அகில இந்திய வானொலி, சென்னை-4**

17 05 2026 12 40

ஞாயிற்றுக்கிழமை நண்பகல்

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

1. ஸ்வீடன் செல்லும் **பிரதமர் திரு. நரேந்திர மோடி** இன்று அந்நாட்டுப் பிரதமரை சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து விவாதிக்க உள்ளார்.

2. ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் வர்த்தக கப்பல் மீது தாக்குதல் நடத்தப்படுவதற்கு ஐ.நா.வின் இந்தியப் பிரதிநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

3. இம்மாதம் 31ஆம் தேதி ஒலிபரப்பாக உள்ள மன் கி பாத் நிகழ்ச்சிக்கு கருத்துகளை தெரிவிக்குமாறு பிரதமர் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. உலக தொலைதொடர்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

5. அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் செல்வ பிரபு திருமாறன் தங்கப்பதக்கம் வென்றார்.

… இனி விரிவான செய்திகள் …

<<<<>>>>

**பிரதமர் திரு. நரேந்திர மோடி** இரண்டு நாள் பயணமாக இன்று ஸ்வீடன் செல்கிறார்.

பிரதமரின் இந்தப் பயணம் இருதரப்பு உறவுகளில் ஒரு மைல்கல்லாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வர்த்தகம், தூய்மை எரிசக்தி உள்ளிட்ட திட்டங்கள், **செயற்கை நுண்ணறிவு**, வளர்ந்து வரும் தொழில்நுட்பம், புத்தாக்க தொழில்கள், பாதுகாப்பு, விண்வெளி, பருவநிலை சவால்களுக்கான நடவடிக்கைகள் உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து ஸ்வீடன் நாட்டுப் பிரதமர் திரு. Ulf Kritersson உடன் **பிரதமர் திரு. நரேந்திர மோடி** ஆலோசிக்க உள்ளார்.

ஸ்வீடன் நாட்டு தொழிலதிபர்களுடன் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்திலும் இரு தலைவர்களும் பங்கேற்க உள்ளனர்.

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் Ursula Von Del Leyen-னும் இக்கூட்டத்தில் கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் வர்த்தக கப்பல்கள் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு ஐ.நா.வின் நிரந்தர இந்தியப் பிரதிநிதி திரு. Parvathaneni Harish கண்டனம் **தெரிவித்துள்ளார்.**

ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக கவுன்சிலின் சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. ஹரீஷ், இந்தத் தாக்குதலை ஏற்க முடியாது என்று கூறினார்.

பொதுமக்களையும், கப்பல் பயணிகள் மீதும், மாலுமிகள் மீதும் தாக்குதல் நடத்தப்படுவதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது என்றும் அவர் **தெரிவித்தார்.**

கடல்சார் பயணத்திற்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்த யாருக்கும் உரிமை இல்லை என்றும் அவர் **கூறினார்.**

ஓமன் கடற்பகுதியில் இந்திய வர்த்தக கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சில தினங்களில் திரு. ஹரீஷ் இந்த கருத்தை **தெரிவித்துள்ளார்.**

இந்த கப்பலில் இருந்த 14 மாலுமிகளையும், ஓமன் அரசு அதிகாரிகள் பத்திரமாக மீட்டனர்.

இருப்பினும் இந்த தாக்குதலை நடத்தியவர்கள் யார் என்று இன்னும் தெரியவரவில்லை.

<<<<>>>>

வீடு வாரியாக முதற்கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கியுள்ளது.

ராஜஸ்தான், மேகாலயா, மகாராஷ்டிரா, ஜார்கண்ட், தில்லி மற்றும் தில்லி புறநகர்ப் பகுதிகளில் இப்பணி தொடங்கியுள்ளது.

வீடு வாரியாக வரிசைப்படுத்தும் பணி ஆந்திரப்பிரதேசம், அருணாச்சாலப்பிரதேசம், பிஹார், சண்டிகட், சத்தீஸ்கட், ஹரியானா, மத்தியப்பிரதேசம், பஞ்சாப், தெலங்கானா, உத்தராகண்ட் மற்றும் தாத்ரா, நாகர்ஹவேலி, டாமன் டையூ யூனியன்பிரதேசத்திலும் தொடங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், முதல் முறையாக மின்னணு உபகரணங்கள் மூலம் இந்த கணக்கெடுப்பு பணி நடத்தப்படுவதாகவும், இருப்பினும் துல்லியமான கணக்கெடுப்பை உறுதி செய்யும் வகையில் வீடு வீடாக சென்று சரிபார்க்கும் பணியும் இணைந்து மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இதற்காக 33 கேள்விகள் கொண்ட படிவம் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

17 05 2026 12 40 Census - 2

தாமாக முன்வந்து விவரங்கள் தெரிவிக்கும் வசதியும் முதல் முறையாக

கணக்கெடுக்கும் பணியில் கொண்டுவரப்பட்டுள்ளது.

குஜராத், ஜம்மு-கஷ்மீர், லடாக் மற்றும் புதுச்சேரியில் இம்முறையில் இம்மாதம் 31ஆம் தேதி வரை விவரங்களைப் பதிவிடலாம்.

இதுவரை ஒரு கோடியே 44 லட்சம் குடும்பங்கள் தாமாக முன்வந்து விவரங்களை பதிவு செய்துள்ளதாக உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

சி.பி.எஸ்.இ-ல் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை மும்மொழி பாடத்திட்டத்தை வரும் ஜூன் மாதம் முதல் கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும் என மத்திய பள்ளிக் கல்வி வாரியம் **தெரிவித்துள்ள**து.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், மூன்று மொழிகளில் இரண்டு மொழிகள் இந்திய மொழிகளாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10ஆம் வகுப்பில் மூன்றாவதாக தெரிவு செய்யப்படும் மொழிக்கு சிபிஎஸ்இ தேர்வுகள் இருக்காது என்றும், பள்ளிகளில் அளிக்கப்படும் Internal மதிப்பெண் அடிப்படையிலேயே மதிப்பீடு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வு எழுதுவதற்கு மூன்றாவது மொழியில் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் அனுமதி மறுக்கப்படாது என்றும் மத்திய பள்ளிக் கல்வி வாரியம் தெளிவுபடுத்தியுள்ளது.

எல்.கே.-ஹா ஏர்நெட்-13

17 05 2026 12 40 Man ki Baat

இம்மாதம் 31ஆம் தேதி ஒலிபரப்பாக உள்ள மன் கி பாத் நிகழ்ச்சிக்கு **பிரதமர் திரு. நரேந்திர மோடி** பொதுமக்களிடம் இருந்து கருத்துகளை தெரிவிக்குமாறு **கேட்டுக்கொண்டுள்ளார்.**

தங்களது கருத்துகளையும், ஆலோசனைகளையும் 1 8 0 0 - 11 - 7 8 0 0 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தெரிவிக்கலாம்.

**நரேந்திர மோடி** செயலி மற்றும் mygov செயலி மூலமாகவும் கருத்துகளை பதிவிடலாம்.

1 9 2 2 என்ற எண்ணிற்கு மிஸ்டு கால் கொடுத்து பெறப்படும் எஸ்எம்எஸ் மூலமாகவும் கருத்துகளை பதிவிடலாம்.

பிரதமர் பங்கேற்கும் 134வது மன் கி பாத் நிகழ்ச்சிக்கு இம்மாதம் 29ஆம் தேதி வரை பொதுமக்களிடம் இருந்து கருத்துகளும், ஆலோசனைகளும் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உலக தொலைதொடர்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1985ஆம் ஆண்டு பாரீசில் சர்வதேச தொலைதொடர்பு சங்கம் தொடங்கப்பட்ட நாள் ஒவ்வொரு ஆண்டும் உலக தொலைதொடர்பு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

தகவல் தொடர்பு கட்டமைப்பை பயன்படுத்தி சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

பல்வேறு தரப்பு மக்களையும், நாடுகளையும் மின்னணு கட்டமைப்பில் இணைக்கும் நாளாகவும் இது திகழ்கிறது.

அரசுகள், தொழில் நிறுவனங்கள், மக்கள் என அனைத்து தரப்பு மக்களுக்கும் பாலமாக தொலைதொடர்பு கட்டமைப்பு விளங்குகிறது.

“டிஜிட்டல் இணைப்பு உலகளாவிய தொடர்பை வலுப்படுத்துகிறது” என்பது இந்த ஆண்டின் உலக தொலைதொடர்பு தின கருப்பொருளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

**உலக உயர் ரத்த அழுத்த தினம் இன்று உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது.**

“**உயர் ரத்த அழுத்தத்தை ஒன்றாகக் கட்டுப்படுத்துவோம். உங்கள் ரத்த அழுத்தத்தை வழக்கமாகப் பரிசோதித்து, அமைதியான கொலையாளியை வெல்லுங்கள்" என்பதுதான் இந்த ஆண்டிற்கான** கருப்பொருளாக **அறிவிக்கப்பட்டுள்ளது.**

உயர் ரத்த அழுத்தம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று தாய்சேய் நல மருத்துவர் டாக்டர் சித்ரா எமது செய்திப் பிரிவுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

(Voice Byte – Dr. Chitra – 45 Sec)

<<<<>>>>

**திருப்பதி இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் நேற்று “ஒரே பாரதம் உன்னத பாரதம்** என்ற பெயரில் இளையோர் **சங்கமம் நிகழ்ச்சி தொடங்கியது.**

**இதனை மாவட்ட ஆட்சியர் திரு. எஸ். வெங்கடேஷ்வர் தொடங்கி வைத்தார்.**

இந்த நிகழ்ச்சியில் பேசிய திருப்பதி ஐஐடி இயக்குநர் பேராசிரியர் கே.என். சத்யநாராயணா, பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒருவருக்கொருவர் கலந்துரையாடவும், நாட்டின் கலாச்சார பன்முகத்தன்மை மற்றும் பாரம்பரியத்தைப் புரிந்து கொள்ளவும் இந்நிகழ்ச்சி ஒரு நல்ல வாய்ப்பை வழங்குகிறது என்று கூறினார்.

மத்திய கல்வி அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள இந்த 10 நாள் நிகழ்ச்சி, இம்மாதம் 27-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

மாணவர்களிடையே கலாச்சார பரிமாற்றம், அறிவுசார் வளர்ச்சி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

இந்தத் திட்டத்தில் புனேவில் உள்ள பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, அவர்கள் ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள கோயில்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் மற்றும் முக்கியமான வளர்ச்சி மையங்களுக்குச் சென்று இந்திய கலாச்சாரம், பாரம்பரியங்கள் மற்றும் பல்வேறு துறைகளில் மாநிலத்தின் வளர்ச்சி குறித்து தெரிந்துகொள்ள உள்ளனர்.

<<<<>>>>

மத்தியப்பிரதேச மாநிலம் ரத்லாமில் இன்று காலை ஒரு பெரிய ரயில் விபத்து தவிர்க்கப்பட்டது.

திருவனந்தபுரம் - ஹசரத் நிஜாமுதீன் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயிலின் பி-1 பெட்டியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

கோட்டா கோட்டத்திற்குட்பட்ட லூனி ரிச்சா - விக்ரம்கர் அலோட் நிலையங்களுக்கு இடையே அதிகாலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இந்த விபத்தில் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று ரத்லாம் ரயில்வே கோட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு. முகேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

ரயில்வே அதிகாரிகள் உடனடியாக செயல்பட்டு, மின்சார இணைப்பைத் துண்டித்தனர்.

தீப்பிடித்த பி-1 பெட்டி, ரயிலில் இருந்து தனியாகப் பிரிக்கப்பட்டது.

அந்தப் பெட்டியில் இருந்த பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

<<<<>>>>

காங்கோவின் கிழக்கு மாகாணமான Ituri-யில் புதிதாக பரவத் தொடங்கியுள்ள எபோலா நோய், Bundibugyo வகையைச் சேர்ந்தது என்றும், இது அதிக உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடியது மற்றும் வேகமாகப் பரவக்கூடியது என்றும் காங்கோ நாடு எச்சரித்துள்ளது.

தலைநகர் கின்ஷாசாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய காங்கோ சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ரோஜர் காம்பா இதனை தெரிவித்தார்.

இந்த புதியவகை எபோலா வகைக்கு தடுப்பூசியோ அல்லது குறிப்பிட்ட சிகிச்சையோ இல்லை என்று கூறினார்.

மேலும், இந்த வகை வைரஸ் பாதிப்பு ஏற்பட்டால் உயிரிழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு 50 சதவீதம் வரை உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் செல்வ பிரபு திருமாறன் தங்கப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியின் Triple Jump பிரிவில் அவர் 17 புள்ளி ஒன்று ஒன்பது மீட்டர் தூரத்தை தாண்டி அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

<<<<The End>>>>